செ.வெ. எண்: 480 நாள்: 14.08.2012

# செய்தி வெளியீடு

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் சமூகமேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. மேலும், சமூக பின்னடைவிலிருந்தும், பொருளாதார நலிவிலிருந்தும் இவர்களை காத்திடவும், கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் உரிய பங்கினை அளித்திடவும், அவர்களின் வாழ்வில் தன்னம்பிக்கையையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திடவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001-2002 ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாகக் கண்டறியப்பட்ட பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்டங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்கள் பயன் அடையும் வகையில் கூடுதலாக 1,600 விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு 57 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மக்களுக்கு இந்த விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் அவர்களின் வாழ்வாதார நிலை மேம்பட வழிவகுக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 14.8.2012.